

# திறவுகோல்

மாசி 2049 / மாத இதழ்

தடம் மாறிய தற்சார்பு

---

தமிழ் தொலைக்காட்சிகளில்
அந்நிய மொழிகளின் திணிப்பு

---

வாக்குரிமை

---

மருத்துவமனையும் Play Schoolம்

---

உழவா போர்

---

ஐம்பதாவது மாடியிலிருந்து
ஒரு யானையை தள்ளிவிட்டால்?
ஓர் அறிவியல் சிந்தனை

வெளியீடு

**மன்னையின் மைந்தர்கள் குழு**

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# சிற்பி



ஆங்கில பாட ஆசிரியர்
ஆனந்த் அவர்கள்

கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை.

ஒருவருக்கு கல்வியே அழியாத செல்வம் என்று வள்ளுவர் சொல்கிறார்.

அத்தைகய கல்வி இன்று அனைவருக்கும் இன்றியமையாத ஒன்று. தரமான கல்வி ஏழைகளுக்கு எட்டா கனியாக மாற்றபட்டு வருகிறது. அவர்களின் ஒரே தீர்வு அரசு பள்ளிகளே.

அரசு பள்ளி மாணவர்கள் என்றாலே இன்று முகம் சுழிக்கும் சமூகத்தில் தான் வாழ்கிறோம்.

பள்ளி படிப்பு என்பது வாழ்வின் அடித்தளமாகும். அறிவு, ஒழுக்கம், பொருளாதாரம் என அனைத்திலும் ஒருவரை மேம்படுத்துவது கல்வி. அக்கல்வியின் அடிப்படையும் பள்ளி படிப்பே. கல்வியானது ஏட்டுக்கல்வியாக மட்டுமில்லாமல் செய்முறை கல்வியாக இருத்தல் அவசியம். உலகறிவையும், உடற்பயிற்சி கல்வியையும் வளர்ப்பதும் இன்றியமையாததாகும். இவற்றை நடைமுறையாக்கி மன வலிமையும், உடல் வலிமையும் இணைந்தே பயிற்றுவிப்பதே சிறந்த பள்ளி படிப்பு.

பள்ளி படிப்பை தரமாக கொடுத்து, தமிழகத்தின் சிறந்த பள்ளியாகவும் பல இந்திய அளவு போட்டிகளில் பரிசு வென்ற அரசு பள்ளியையும், அதற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியரைப் பற்றியே இந்த கட்டுரை.

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் அருகில் உள்ள மிக சிறிய கிராமமான காளாச்சேரியில் இருக்கும் அரசு நடுநிலை பள்ளி பயிற்றுவிப்பதிலும் உள் கட்டமைப்புகளிலும் சிறந்து விளங்குகிறது.

2015 - 2016க்கான சிறந்த பள்ளி என விருது பெற்ற பள்ளியே அரசு நடுநிலைப் பள்ளி காளாச்சேரி.

2002ல் தொடக்க பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு 2008ல் நடுநிலை பள்ளியாக மாற்றப்பட்டது.


















அசர வைக்கும் காளாச்சேரி அரசு நடுநிலைப் பள்ளியின் புகைப்படங்கள்

தற்போது மொத்தம் 130 மாணவர்கள் படிக்கிறார்கள் மற்றும் எட்டு ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள்.

பள்ளியின் தலைமை ஆசிரியர் திலகம் அவர்களை சந்தித்தோம். அறை முழுவதும் பரிசுகளும் சான்றிதழ்களும் நிறைந்து இருந்தன.

தலைமை ஆசிரியரின் வழிகாட்டுதலின் படி பள்ளியின் ஆங்கில பாட ஆசிரியரான ஆனந்த் அவர்களை திறவுகோல் அணியினர் சந்தித்தோம்.

பெயருக்கு ஏற்றார் போல் அவர் முகத்திலும் அத்தனை ஆனந்தம் மற்றும் அவரது வகுப்பறை நம்மை அதிர்ச்சி ஊட்டும் அளவே இருந்தது.

வகுப்பறை முழுவதும் வட்ட மேசைகள், மேசைகளை சுற்றி மூன்று மூன்று மாணவர்கள், கணினி, தொடுதிரை பலகை, மாணவர்கள் செய்த வடிவமைப்புகள் Project works என வகுப்பறை நிறைந்து இருந்தது.

இந்த வகுப்பறை ALM என்று சொல்ல கூடிய Active Learning Method என்ற முறைப்படி நடத்தப்படுகிறது.

அதாவது நம் அரசால் அங்கீகரிக்கபட்ட சமச்சீர் கல்வி முறை இதுவே. ஒரு சில பள்ளிகளை தவிர மற்ற பள்ளிகளில் இந்த முறை ஏட்டளவில் மட்டுமே உள்ளது.

அரசு பள்ளியில் Disney play center. வகுப்புகள் இருப்பது நம்மை ஆச்சர்யப்படுத்துகிறது.

ஆங்கில ஆசிரியர் ஆனந்த் அவர்களிடம் சில கேள்விகளை முன் வைத்தோம்.

இந்த பள்ளியில் உங்கள் பணி பற்றி சொல்லுங்கள்?

எனது முதல் பணி இடமே இந்த பள்ளி தான். 2010ல் இந்த பள்ளியில் இணைந்தேன். அனைத்து மாணவர்களையும் ஆங்கிலம் பேச வைக்க முயற்சி செய்தேன். முதல் இரண்டு வருடம் கொஞ்சம் சிரமமாக இருந்தது. 2013ல் அனைவரயும் பேச வைத்தேன்.

இந்த ஆங்கில பேசும் திறமையை வைத்து தான் தொடர்ச்சியாக சில விருதுகளைப் பெற்றோம்.

பள்ளி இந்த வளர்ச்சியை அடைய சுமார் எத்தனை ஆண்டுகள் எடுத்துக்கொண்டது?

2014ல் ஆரம்பித்தோம், முழு பள்ளியை கட்டமைக்க 2016 வரை ஆனது. ஆரம்பத்தில் பள்ளியில் முன்பக்க சுவர் கதவு இல்லை அரசு அலுவலர்களிடம் முறையிட்டோம். எந்த ஏற்பாடும் ஆகவில்லை .

பின்பு எனது நண்பர்கள் மூலம் நிதி திரட்டி சுவர், கதவுளை செய்து கொண்டோம்.

இது வரை வென்றுள்ள விருதுகள் பற்றி?

1. இந்திய அளவில் நடைபெற்ற ஐ கேன் விருதுகள் - 2013 போட்டியில் வெற்றி

2. இந்திய அளவில் நடைபெற்ற ஐ கேன் விருதுகள் - 2014 போட்டியில் இரண்டு விருதுகள் வெற்றி பெற்று, கேடயமும் பரிசு தொகையும் பெற்றோம்.

3. இந்திய அளவில் நடைபெற்ற ஐ கேன் விருதுகள் - 2015 போட்டியில் வெற்றி

4. இந்திய அளவில் 4970 பள்ளிகள் பங்கு கொண்ட டெல்கியில் நடைப்பெற்ற Spirit of Community Awards - 2016 என்றப் போட்டியில் முதல் பரிசு பெற்று தங்கப்பதக்கமும், வெள்ளிப்பதக்கமும் ரூ.50000 ரொக்கபரிசும் பெற்றோம்.

5. இரண்டாவது முறையாக அகில இந்திய அளவில் 4970 பள்ளிகள் பங்குகொண்ட டெல்கியில் நடைபெற்ற Spirit of Community Awards - 2017 என்ற போட்டியில் முதல் பரிசு பெற்று தங்கபதக்கமும், வெள்ளிபதக்கமும் ரூ.50000 ரொக்கபரிசும் பெற்றோம்.

இந்த பணிகள் மூலம் உங்களுக்கு கிடைத்த பாராட்டுகள் பற்றி சொல்லுங்கள்

ஆனந்த விகடன் நடத்திய சிறந்த பத்து மனிதர்கள் 2015 பட்டியலில் என்னையும் தேர்ந்தெடுத்து கௌரவித்தார்கள்.

ஆனந்த விகடன் மற்றும் நடிகர் ராகவா லாரன்சால் இணைந்து தொடங்கப்பட்ட அறம் செய்ய விரும்பு என்ற அமைப்பில் தேர்ந்தெடுத்து பரிசு தொகையாக ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார்கள்.

அந்த தொகையை இங்கு சுற்றி உள்ள அரசு பள்ளிகளுக்கு R. O. System. Incinerator, வாங்கி கொடுத்தோம்.

ஒரு பள்ளிக்கு தண்ணிர் தொட்டி கட்டி கொடுத்தோம்.

இந்த செய்தியை தி கிந்து நாளிதழில் பார்த்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு நீதியரசர் சா.நாகமுத்து அவர்கள் பாராட்டி கடிதம் அனுப்பினார்.

மாண்புமிகு சகாயம் இ.ஆ.ப அவர்களால் சிறந்த ஆசிரியர் விருது வாங்கி உள்ளேன்.

நீங்கள் ஆசிரியர் ஆக காரணம் அல்லது உங்களை ஊக்கப்படுத்திய விடயம் என்ன?

கப்பல் துறையில் பணிபுரியவே எனக்கு விருப்பம். ஒரு நிகழ்வால் ஆசிரியர் ஆகவேண்டும் என்று முடிவு செய்தேன். ஆறாம் வகுப்பு படிக்கும் போது மேசையில் சாக்பீஸ் வைப்பது என்னோட வேலை. ஒரு நாள் மேசை பலகையின் கீழ் இருந்த கதவை திறக்க முடியவில்லை என்று எதேச்சையாக ஆசிரியரின் நாற்காலியின் ஒரு கைபிடியில் அமர்ந்து மேசையை திறந்தேன்.

அதை பார்த்த ஆசிரியர் எப்படி நாற்காலியில் அமரலாம் என்று அன்று முழுவதும் அடித்தார். அன்று முடிவு செய்தேன் ஆசிரியர் ஆக வேண்டும் என்று.

அரசு பள்ளியை தரம் உயர்த்த நினைக்கும் மற்றவர்கள் தங்களைத் தொடர்பு கொள்ளலாமா?

நிச்சயமாக தொடர்பு கொள்ளலாம். எளிதில் சொல்லி கொடுக்க சில காணொலிகளை நான் செய்து வைத்து உள்ளேன். தற்போதும் அதை நண்பர்களுக்கு கொடுத்து உதவுகிறேன் என்று மகிழ்ச்சியுடன் விடைபெற்றார் ஆனந்த் அவர்கள்.

ஒரு ஆசிரியரால் ஒரு அரசு பள்ளியை நாட்டின் சிறந்த பள்ளிகளில் ஒன்றாக தரம் உயர்த்த முடியும் என்றால், நம்முடன் பயணிக்கும் அனைத்து ஆசிரியர்களாலும் முடியும்.

இவரிடம் பயிலும் மாணவர்கள் இவரை போன்றே ஆசிரியராக வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

ஆயுத எழுத்தில்
உலகின் மிக பெரிய
ஆயுதத்தை அறிமுகம்
செய்பவர்கள்

பாராமுகம் நோக்காது
படைப்பையே நோக்கும்

சிற்பியே
ஆசிரியர்கள்

அதற்கு சிறந்த உதாரணம் தான் நாம் சந்தித்த ஆசிரியர் ஆனந்த்.

இன்னும் பலர் இப்படி செயல்படுகிறார்கள். அவர்களை எங்களுக்கு அறிமுகபடுத்துங்கள். நாங்கள் பலருக்கு அவர்களை கொண்டுச் செல்கிறோம்.

சிறந்த ஆசிரியரே சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும்.

அந்த சிற்பிக்கு உதவியாக இருந்த பிற தோழர்கள், நல்லுள்ளங்கள் அனைத்திற்கும் எங்கள் நன்றிகளும், வாழ்த்துகளும்.

## நன்றி



மன்னை ராம்

அட்டைப்பட உதவி
VASA
PHOTOGRAPHY

**வசந்தன்**
hp: 9786828973
monguski@gmail.com
vasa photography

# தமிழ் தொலைக்காட்சிகளில் அந்நிய மொழிகளின் திணிப்பு



நிரஞ்சன்
மன்னார்குடி

ஊடகம் என்பது மிக வலிமையானது. ஆனால் அது பெரும்பாலும் நம்மை வலிமை ஆக்குவதில்லை. பலவீனப்படுத்துகிறது. நம் மொழியை மறக்கடிக்க செய்கிறது.

தமிழ் மொழியில் தொலைக்காட்சி ஒளிபரப்பு செய்யப்படும் என்று கூறி தான் தமிழ்நாட்டின் அனைத்து தொலைக்காட்சிகளும் உரிமம் பெறுகின்றது. ஆனால் அப்படியா இருக்கிறது. தொலைக்காட்சியின் பெயர் கூட தமிழில் இருப்பது இல்லை. Sun TV, KTV, Sun News, Sun Music, Jaya Max, Jaya News, Polimer, News 7, News 18 போன்று பல தமிழ் தொலைக்காட்சிகள் ஆங்கில பெயர்களில் தான் இருக்கிறது.

மற்ற தொலைக்காட்சிகளும் இலட்சனை உட்பட அனைத்திலும் TV என்றே குறிப்பிடுகிறது, அல்லது channel என்று குறிப்பிடுகிறது. தொலைக்காட்சி என்று தமிழில் குறிப்பிடுவது இல்லை. Vijay TV, Thanthi TV, Jaya TV, Mega TV, Raj TV, Zee Tamil இது போன்று மற்றும் பல தொலைக்காட்சிகள் இதற்கு உதாரணம்.

பல தொலைக்காட்சிகள் நேரடியாக ஒளிபரப்பப்படும் நிகழ்வுகளை நேரலை என்று குறிப்பிடுவது இல்லை LIVE என்றே குறிப்பிடுகிறது. செய்தி தொலைக்காட்சிகள் சற்று முன் நடந்த நிகழ்வுகளை கீழே எழுத்து வடிவத்தில் ஓட விடுவதை பார்த்திருப்பீர்கள்.

அதை பெரும்பாலும் ஆங்கிலத்தில் JUST IN, NEWS UPDATE, NEWS NOW என்றே குறிப்பிடுகிறது. நிகழ்ச்சி நிரல்களை movie matinee, special show, morning show, every sunday, MONDAY to FRIDAY, sunday surprise என்று தான் குறிப்பிடுகிறார்கள்.

மேலும் பெரும்பான்மையான நிகழ்ச்சிகளுக்கு தமிழில் பெயர் வைப்பதில்லை. Super Singer, Super Singer Junior, Big Boss, Sun Singer, Sunday Galatta, Comedy Junction, Top 10 Movies, Ready Steady போ, Kalakkal Champions, Connections, என்றும் Super, Super சமையல், இது நம்ம Cinema, பாடவா Duet பாடல்கள், Kitchen Cabinet, Robo Leaks, Housefull, Back To Back Songs, செம Morning, Fresh Beats, Trending Machi, Dance Jodi Dance, Sundays With Anil And Karky இது போன்று இன்னும் பல நிகழ்ச்சிகள் தமிழில் பெயர் வைப்பதில்லை. இந்த நிகழ்ச்சிகள் தான் புகழ்பெற்ற

நிகழ்ச்சிகள், பலரால் பார்க்கப்படும் நிகழ்ச்சிகள் ஆகும். இதில் இன்னொரு விடயம் கவனித்தீர்களா? இவை அனைத்தும் குழந்தைகளும், இளைஞர்களும் பார்க்கும் நிகழ்சிகள் ஆகும், அடுத்த தலைமுறைகளை குறி வைத்து தான் மொழி சிதைக்கும் முயற்சி நடக்கிறது.

இளைஞர்கள் அதிகமாக இசை நிகழ்ச்சிகளையும், SUN MUSIC, இசையருவி போன்ற இசை தொலைக்காட்சிகளையும் தான் அதிகம் பார்க்கிறார்கள். இந்த தொலைக்காட்சிகளில் தொலைபேசியில் உரையாடும் தொகுப்பாளர்கள் அந்நிய மொழிகளில் தான் அதிகம் பேசுகிறார்கள்.

குறிப்பாக ''வாங்க ஜி, சொல்லுங்க ஜி, எப்படி இருக்கீங்க ஜி, என்ன பாட்டு dedicate பண்ணனும் ஜி'' என்று அந்நிய மொழிகளை தான் பயன் படுத்துகிறார்கள். சகோ, நண்பா, தோழா என்றெல்லாம் பேசுவதில்லை ''ஜி'' என்று இந்தி வழக்கத்தை தான் திணிக்கிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்கள் மத்தியில் ''ஜி'' என்று அழைக்கும் பழக்கம் பரவி விட்டது.

இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் பங்கு பெரும் நிகழ்சிகள் அனைத்தும் தமிழ் மறந்து போகும் அளவுக்கு தான் உரையாடல் இருக்கிறது. welcome to this show, amazing performance, your scores, your marks, song, dedicate, enjoy பண்ணுங்க, judges, mam, season 4, grand finale, very good , small commercial break போன்ற மரபற்ற அந்நிய மொழிகளை உபயோகிக்கிறார்கள். அதுவே நமது குழந்தைகளுக்கும், இளைஞர்களுக்கும் அன்றாட வார்த்தைகளாகி விட்டன.

விளம்பரங்கள் பெரும்பாலும் ஆங்கிலம் மற்றும் இந்தி கலக்காமல் தமிழ் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்ப படுவதில்லை. சமீபத்தில் நண்பர் ஒருத்தர் AMUL பொருட்களின் விளம்பரம் இந்தி மொழியில் ஒளிபரப்பப்படுவதை சன் தொலைக்காட்சியில் பார்த்து அதிர்ச்சியுற்றதாக கூறினார். எனக்கும் பெரும் வருத்தமாக இருந்தது, இதற்காகவா தமிழில் உரிமம் பெற்றார்கள். இந்தி திணிப்பை எதிர்த்து போராடியவர்கள் அனைவரும் முட்டாள்களா?

தமிழர்களின் பொங்கல் விழா அன்று தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியை பார்த்தேன். பொங்கல் விழா கொண்டாட்டம் தான் அந்த நிகழ்ச்சி. அதில் பொங்கலை celebrate செய்வதாகவும், enjoy செய்வதாகவும் கூறி கல கலவென சிரிக்கிறார்கள். சுதந்திர தினத்தன்று பள்ளி குழந்தைகளிடம் Happy Independance Day என்று கை குழுக்குகிறார் சன் தொலைக்காட்சி தொகுப்பாளர்.

இதனால் தான் சுதந்திரம் கிடைத்ததாக என்னால் ஏற்க முடியவில்லை. மொழி சுதந்திரம் இல்லாத எந்த நாடும் வெற்றி பெறாது. தொலைக்காட்சி என்னும் வலிமையான ஊடகம் நமது மொழியை சிதைக்கிறது. நாம் விழித்துக்கொண்டால் நம் மொழி சிதையாது. தைப் புரட்சிக்கு பிறகு தமிழ் உணர்வு தமிழர்களுக்கு

அதிகரித்துள்ளது. அதன் விளைவாக தான் Kofee With DD, அன்புடன் DD என்று மாறியது. இது போல பல நிகழ்ச்சிகள். நாம் விழித்துகொண்டால் நம் மொழி சிதையாது.

விழித்துக்கொள் தமிழா.

- நிரஞ்சன்

# தேடல்

கால் வயிறாவது நிரம்புமா
என்ற கவலையோடு
கடந்து செல்லும்
கால்களை கவனித்துக்கொண்டே
இருக்கின்றன ...

செருப்புத் தைக்கும்
தொழிலாளியின் கண்கள் ...

எங்கே தேடுவேன்
ஆயிரம் வார்த்தைகளுக்குள்
அகப்பட்டுக் கொண்ட
முற்றுப்பெறாத - என்
கவிதைக்கான வார்த்தைகளை
எங்கே தேடுவேன்

சிந்தனையோடு நின்று போன
என் கவிதையை வடித்தெடுக்க
உறக்கம் போன மீதி இரவிலும்
சொற்களை தேடுகிறேன்

நீண்டு கொண்டே போகிறது
சிந்தனை

அப்பா சொன்ன அற்புதக்கவிதைகளிலா...
அம்மா பாடிய ஆராரோ பாட்டினிலா...
ஆசிரியர் சொன்ன அறக் கதைகளிலா...
பாட்டிச்சொன்ன பறவைக் கதைகளிலா...
எங்கே தேடுவேன்...
என் கவிதைக்கான வார்த்தைகளை...

பறவைகள் சோம்பல் முறித்துவிட்டன
எங்கோ ஒரு சேவலும் கூவ முற்பட்டுவிட்டது
சரி விடியட்டும்
வெளிச்சத்தில் தேடிக் கொள்கிறேன்



முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

99763 71747
vasiva1711gmail.com

# சுயத்தொழில் செய்வோம்...!


விக்னேசு மன்னை

நாம் பிறந்தோம் தாய் தந்தையினரால் வளர்க்கப்பட்டோம் பள்ளி கல்லூரி என பல்வேறு படிப்புகளை படித்துமுடித்து நமது குடும்ப சூழ்நிலை காரணமாக சிலர் தனது தந்தை தொழிலையோ அல்லது உள்ளூரிலோ வெளிநாட்டிலோ நம் சுய பொருளாதாரத்தை மேம்படுத்த அடுத்தவரிடம் வேலைக்கு சென்று விடுகிறோம். இதற்கு இடையில் நாம் விளையாட்டு, கேளிக்கை, மது, புகை பழக்கம், சூது என அனைத்தையும் நம் தேவைக்கு ஏற்பவும் சில நேரங்களில் அதிகமாகவே பழக்கிகொள்கிறோம்.

காலப்போக்கில் இதற்கு அடிமையாகி நாம் ஏன் இந்த நிலைக்கு ஆளாக்கியுள்ளோம் என்ற சிந்தனை அற்ற நிலையில் வாழ்ந்து மடிந்துவிடுகிறோம், இதற்கிடையே திருமணம் வேறு,. அதாவது நாம் நம் பிறந்த தாய்மண்ணில் நம்மால் ஏன் தொழில் தொடங்க முடியவில்லை.

முதல் காரணம் நம் மீது நமக்கே நம்பிக்கையின்மை, இரண்டாவது மற்ற தொழில் முனைவொருடன் போட்டியில் நாம் நிலையாக இருக்கமுடியுமா என்ற ஐயம், மூன்றாவது அதித எதிர்ப்பு அதாவது முதலிடு செய்தவுடன் லாபத்தை எதிர்பார்ப்பது.

இது மூன்றையும் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு நம்மால் முடியும் என்ற முழு நம்பிகையுடன் களத்தில் இறங்கினால் வெற்றி சாத்தியமே.

ஒவ்வொருவரும் இதுபோல் நம்மால் முடியாது முடியாது என்று நினைத்ததன் விளைவு தமிழர்நாடு முழுவதும் 100 க்கு 65 சதவீதம் அண்டை மாநிலத்தவரின் கடைகள் மட்டுமே.

இதே நிலை நீடித்தால் இன்று யார் தமிழர் என்று கேட்பவர்கள் நாளை தமிழர்களுக்கேன எந்தவொரு தொழிலும் இல்லை அனைவரும் மற்றவர்கள் கீழ் அடிமையாகவே வாழ்ந்தார்கள் என்று வரலாறு பேசும்

சிந்திப்போம்...!
சுயத்தொழில் செய்வோம்...!

# மருத்துவமனையும் Play Schoolம்



செந்தில்குமரன்
மன்னார்குடி

ஊருக்கு ஊர் play school எனப்படும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான பள்ளி, தற்போது தெருவுக்கு தெரு உருவாகியுள்ளது.

நாம் சிறு வயதில் பால்வாடி பள்ளி என்று சொல்லிக் கொண்டிருந்ததை தான் இன்று play school என சொல்லிக் கொள்கிறார்கள்.

பால்வாடி பள்ளிக்கூடங்களில் மூன்று அல்லது நான்கு மணி நேரம் குழந்தைகளை அமர வைத்து சிறு விளையாட்டு, கதை அல்லது பாடல் மற்றும் சத்துமாவு உருண்டையுடன் பள்ளி முடிவடையும்.

அங்கு குழந்தைகள் படித்தது போலவும் இருக்கும், விளையாடியது போலவும் இருக்கும். மேலும் குழந்தைப் பருவத்திலேயே பாலுணர்வை காரணம் காட்டி சிறுவர்கள் தனியாகவும் சிறுமிகள் தனியாகவும் பிரித்து வைக்கும் அவலங்கள் அன்று உருவாகவில்லை.

புழுதியில் புரண்டு நினைத்த நேரத்தில் சிரித்தும் அழுதும் குழந்தைகளாய் பயிற்றுவிக்கப்பட்டனர்.

ஆனால் இன்று, ஒன்பது மணிக்கு மணி அடித்ததும் குழந்தைகள் அனைவரும் பள்ளியில் இருக்க வேண்டும், பத்து மணிக்கு தான் தின்பண்டங்கள் உட்கொள்ள வேண்டும், சிரிக்கச் சொல்லும் போது தான் சிரிக்க வேண்டும். அழவே கூடாது, இயற்கை உபாதைகள் வந்தால் போக கூடாது என்பது என சொல்லிக் கொண்டே போகலாம்.

நேரம் தவறாமையை இச்சிறுவயதிலேயே கற்றுக் கொள்ள வேண்டுமல்லவா என நீங்கள் கேட்டால், நேரம் என்று ஒன்று இருக்கிறதை முதலில் குழந்தைக்கு கற்றுக் கொடுங்கள், பிறகு நேரம் தவறாமையை அக்குழந்தையே பார்த்துக் கொள்ளும்.

குழந்தைகள் தவழ ஆரம்பிக்கும் வயதில் பள்ளியில் சேர்த்தீர்கள் என்றால், ஓடுகிற வயதில் மருத்துவமனையில் சேர்க்க நேரிடும்.

ஒரு குழந்தையின் வளர்ச்சியானது தொடர் செயலாகும். அதன் வளர்ச்சிப்படி

நிலைகளுக்கேற்ப, குறிப்பிட்ட வயதில் குறிப்பிட்ட செயலை செய்வார்கள். ஒரு குழந்தையைப் போல மற்ற குழந்தைகளும் வளர வேண்டும் என்பது அவசியமில்லை என்பதை பெற்றோர்கள் உணர வேண்டும். பக்கத்து வீட்டு குழந்தை ஒரு வயதில் நடக்கிறது, நம் குழந்தை இன்னும் நடக்கவில்லை என்று புலம்புவதிலும், வருத்தப்படுவதிலும் ஒரு பயனுமில்லை.


ஒரு குழந்தை தன் கை விரல்களை விரித்துக் கொள்வதிலிருந்து, தவழ்வது வரையுமான காலகட்டம் வரைக்குமே சொல்லப்படா இரகசியங்கள் அத்தனை இருக்கிறது.

ஆம், நன்றாகத் தவழ்ந்து, ஓடியாடி விளையாடிய குழந்தையின் கையெழுத்துக்கும், தவழ ஆரம்பித்ததும் சக்கரத்துடன் கூடிய நாற்காலியைப் பிடித்துக் கொண்டு நடந்த குழந்தையின் கையெழுத்துக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்வீர்களெனில், பெற்றோர்களாகிய நீங்கள் விழித்துக் கொண்டீர்கள் என அர்த்தம்.

மருத்துவமனைக்கும் play schoolக்கும் உள்ள தொடர்பின் ஆரம்பம் தான் இது...

## இரா. செந்தில் குமரன்
மன்னார்குடி

இனிதன் ராசசேகரன்
LKG
மன்னை



# ஐம்பதாவது மாடியிலிருந்து ஒரு யானையை தள்ளிவிட்டால்?

## ஓர் அறிவியல் சிந்தனை



அரவிந்த் தனபால்

கற்பனை செய்து கொள்ளவும். ஒரு உயரமான ஐம்பது மாடிக்கட்டிடத்தில் இருந்து ஒரு எலி, ஒரு நாய் மற்றும் ஒரு யானை ஆகியவற்றை தரையிலுள்ள பெரிய மெத்தை ஒன்றில் தள்ளிவிடுகிறோம். கீழே விழுந்த..

எலி - ஒரு கணம் திகைத்து, பிறகு தன்னை உலுக்கு உலுக்கிவிட்டு எரிச்சலுடன் அங்கிருந்து நகர்ந்தது.

நாய் - அதன் பாதி எலும்புகள் முறிந்து அங்கேயே பரிதாபமாக உயிரிழந்தது.

யானை - அதன் எலும்புகள் மற்றும் உள்ளுறுப்புகள் அனைத்தும் சிதறிச் சின்னாபின்னமானது. எரிச்சலாக வாய்ப்பே இல்லாமல் போனது.

நாயும், யானையும் இறந்துவிடும்பொழுது, நமது எலி மட்டும் உயிர் பிழைத்தது எப்படி? பதில் அளவு. உயிரினங்களின் உடல் அளவை பொருத்து அதன் இயற்கை விதிகள் வேறுபடுவதை நாம் கருத்தில் கொள்ளவதில்லை என்றாலும், கண்ணுக்கு தெரியாத பாக்டீரியாக்கள் முதல் பூச்சிகள், எறும்புகள், எலிகள், கழுகுகள், மனிதர்கள், குதிரைகள் மற்றும் நீலத்திமிங்கலங்கள் வரை ஒவ்வொன்றும் அதன் தனித்தனி பிரபஞ்சத்தில் இதே உலகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

உதாரணமாக ஒரு திராட்சையை கற்பனை செய்து பாருங்கள். அதனுடைய மூன்று அம்சங்கள்: அதன் நீளம், அதன் பரப்பளவு (கருநீலத் தோல்) மற்றும் அதன் கொள்ளளவு (ரசம், கொட்டை). இப்பொழுது திராட்சையை நாம் பத்து மடங்கு பெரிதாக்கினால், அதன் நீளம் மட்டுமே பத்து மடங்கு வளர்ந்திருக்கும். அதன் தோல் நூறு மடங்காகிருக்கும், மற்றும் உள்ளிருந்த ரசம் ஆயிரம் மடங்கு அதிகமாயிருக்கும். புரிந்து கொள்ளவும், இயற்கையின் விதி அதுவே.

ஒரு பொருளின் எடை, அதன் கொள்ளளவை (volume) பொருத்தே தீர்மானிக்கப்படுகிறது. ஆக எடைக்கேற்ப கீழே விழும் அடியின் தாக்கம் குறையும் அல்லது பலப்படும். "The smaller you are, the less you care about gravity".

மிகச் சிறிய உயிரினங்களின் உலகத்தில் புவியீர்ப்பு விசை பற்றி கவலை பட தேவையில்லை என்றாலும், அவற்றிற்கு வேறு பிரச்சனை ஒன்று உள்ளது, தண்ணீரின் பரப்பிழு விசை (surface tension of water). பெரும்பாலான பூச்சிகள் நீரை தொடுவது என்பது அவற்றிற்கு வாழ்வா? சாவா? போராட்டம். ஏனெனில், பூச்சிகளின் பரப்பளவு அதன் கொள்ளளவுடன் ஒப்பிட்டு பார்த்தால் மிகவும் பெரியது. ஆதலால், சில பூச்சுகள் தன் மேல் நீர் ஒட்டாதவாறு பரிணாம வளர்ச்சி அடைந்துள்ளது.

ஒவ்வொரு உயிரினத்திற்கும் அதன் அளவை பொருத்து, உடல் விதிமுறைகள் வேறுபடுவது மிகவும் விசித்திரமானது. இவ்வுலகம் உருவானது மனிதர்களுக்காக மட்டுமல்ல. வாழ்வோம், வாழவிடுவோம்.

சரி இப்போது, ஆரம்ப கேள்விக்கு திரும்புவோம்: நமது எலி உயிர் பிழைத்தது எப்படி? பதில் கிடைத்ததா!!

- அரவிந்த் தனபால்

கவிதன் ராசசேகரன்
UKG
மன்னை



# மாற்ற வேண்டிய மாற்றம்



மகாலெட்சுமி

''மாற்றம் ஒன்றே மாறாதது''

நம்மில் பலர் இதனை மனதில் கொண்டு தான் பல மாற்றங்களை ஏற்றுக்கொண்டுள்ளோம். அவற்றுள் பல நல்ல மாற்றங்களாக அமைகின்றன, சில தேவையற்றவையாக கருதப்படுகின்றன. சரி! இன்றைய சூழலை கருத்தில் கொண்டு சில ''மாற்றத்தை'' பற்றி விவரிக்கின்றேன்.

அனைவருமே எதிர்பார்ப்பது நல்ல கல்வி, சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு. ஆனால் இவை அனைத்தும் ஈடேற, நமது பங்கு என்பது மிகவும் குறைந்த விகிதமே. இன்றும் பலருக்கு பார்க்கும் இடங்களிலெல்லாம் குப்பை போடுவது குற்ற உணர்வை ஏற்படுத்துவதில்லை. இதுபோன்ற செய்கைகளாலேயே ''சென்னை'' போன்றப் பெருநகரங்கள் குப்பைகளுகென்று தனிக்கிடங்கே வைத்துள்ளன. இதுமட்டுமல்ல இதுபோல் பல செயல்கள்.

நம்மவரில் சிலருக்கு முறையான கல்வி பெற்றும் அறிவு மங்கியே உள்ளது. சில இடங்களில் எதை செய்யகூடாது என்று குறிப்பிட்டிருக்கிறதோ அதை தான் விரும்பி செய்வார்கள். உதாரணமாக ''சுவற்றில் அறிவிப்பு (notice) ஒட்டாதீர்கள்'' என்று இருந்தால் அங்கு தான் தேடிச் சென்று ஒட்டுவார்கள். ''இங்கு எச்சில் துப்பாதீர்கள்'' என்றிருந்தால் அதையும் மதிப்பதில்லை. இதுபோன்று பல... ஒட்டாதீர்கள் என்று இருந்தால் அங்கு தான் தேடிச் சென்று ஒட்டுவார்கள். ''இங்கு எச்சில் துப்பாதீர்கள்'' என்றிருந்தால் அதையும் மதிப்பதில்லை. இதுபோன்று பல...

அயல்நாடுகளை போல் சுத்தம் வேண்டுமெனில், சுத்தமாக வைக்க ஒத்துழைப்பு கொடுக்குமளவுக்காவது மக்கள் மனதில் மாற்றம் தேவை. இல்லையெனில் எத்தனை தலைமுறை கடந்தாலும் எதையும் மாற்ற இயலாது.

குடிக்கும் நீரை விலைகொடுத்து வாங்கும் நிலையை தற்போது அடைந்திருக்கிறோம். நம் மனதில் ''மாற்றம்'' ஏற்படாவிடில் சுவாசிக்கும் காற்றையும் விலைக்கு வாங்கும் நாள் வெகுத்தொலைவில் இல்லை. ஏற்கனவே டெல்லி போன்ற மாநகரங்களில் இந்த அவலம் அரங்கேறிவிட்டது.

மற்றொரு முக்கியமான தேவை ''நல்ல தலைமை''. நம் மாநிலத்தில் கேள்விக்குறியாக இருக்கும் ஒரு விடயம். இவ்வாறு கேள்விக்குறியாக மாறுவதற்கு காரணம் யார்? வேறு யாருமில்லை மக்களாகிய நாமே தான். இலவசதிற்க்கும்

பணத்திற்கும் ஆசைப்பட்டு அன்றாட வாழ்க்கையில் அடிமைபோல் வாழ்கிறோம். நிஜ வாழ்க்கைக்கும் நிழல் வாழ்க்கைக்கும் வித்தியாசம் தெரியாமல் நாட்டை தவறான வழியில் வழிநடத்திக் கொண்டிருக்கிறோம். தலைமை சரியில்லை என்று கூறுவதற்கு நம்மில் எவருக்கும் தகுதியல்லை. ஏனெனில் இச்சூழ்நிலையை உருவாக்கியதே நாம் தானே. ஒரு தலைவனை தேர்ந்தெடுக்க வேண்டுமெனில் முதலில் ஒவ்வொருவரும் அவரவருக்குள் இருக்கும் தலைவனை வெளிக்கொணர வேண்டும்.

நாம் மட்டும் மாறாது, நம்மை சுற்றி இருப்போரிடமும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். போலியான வார்த்தைகளுக்கும் இலவசம் என்ற மோகத்துக்கும் ஏமார்ந்து போகாமல் ஒருவர் இதுவரை மக்கள் நலனில் எவ்வளவு பங்களித்துள்ளார் என்ற அடிப்படையில் தேர்ந்தெடுத்தாலே போதும். ‘‘நம் நாடு’’ வெள்ளையரிடமிருந்து தப்பித்து கொள்ளையரிடம் சிக்காமல் நல்ல நாடாக திகழும். இத்தகைய நல்ல ‘‘மாற்றம்’’ ஏற்படுவது இளைஞர்களாகிய நமது கையில் தான் இருக்கிறது.

**- மகாலெட்சுமி சிவானந்தம்**

ஓவியம்
ஜெசி



# வாக்குரிமை


செந்தில் பக்கிரிசாமி
மன்னை

வாக்கு அளிக்காதவர்களை தேச விரோதியாக சித்தரித்து அவர்கள் அரசை விமர்சனம் செய்ய தகுதி இல்லாதவர் போல் பேசும் தேச பக்தர்களுக்கு இந்த கட்டுரை சமர்ப்பணம்.

அதற்கு முன் அவர்களிடம் இருந்து பெரும் வரி பணத்திற்கு விலக்கு கொடுத்து விட்டு அவர்களை ஒதுக்கி வைக்கலாம். கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்ற நிலைப்பாட்டில் இருக்கக்கூடாது.

வரிப்பணம் என்றால் பலர் நினைப்பது போல் வருமான வரி மட்டுமே என்று அர்த்தம் அல்ல.எனவே வருமான வரி செலுத்துபவர் மட்டுமே வரி செலுத்தும் பிரிவினர் என்று எண்ணி விடக் கூடாது.

பின் யார் யார் எல்லாம் வரி செலுத்துபவர்?

இந்த நாட்டில் நாம் வசிக்க, புசிக்க, ருசிக்க, குளிக்க, களிக்க என யாவற்றுக்கும் வரி கட்டுகிறோம். இது சேவை வரி, சரக்கு வரி, வீட்டு வரி, விற்பனை வரி என்ற பல பெயரில் உண்டு. எனவே நம் வரிப்பணத்தை கொண்டு ஆட்சி நடத்துபவரின் தவறுகளை யார் வேண்டுமானாலும் கேட்கலாம். அதற்கு முழு உரிமை உண்டு. இதற்கும் வாக்கு செலுத்துவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தன் தவறை மறைக்க முயல்பவர்கள் கண்டுப்பிடித்த காரணம்.

எனில் வாக்குரிமை என்பது அவசியமா? மிக மிக அவசியம். நம் எதிர் காலத்தை தீர்மானிக்கும் சக்தி. எனவே அதை நாம் வீண் அடிப்பது தவறு. ஆனால் வாக்குரிமை பயன்படுத்தாதவர்களை குற்றவாளிகளாக சித்தரிப்பதில் சில தவிர்க்க முடியாத அடிப்படை சிக்கல்கள் உள்ளன.

சரி யார் யார் எல்லாம் வாக்கு செலுத்தாதவர்கள்?

1) வெளி நாட்டில் உள்ளவர்கள். விடுமுறை எடுத்து வர முடியாதவர்கள்..

2) வாக்கு சீட்டில் இருந்து பெயர் விடுபட்டவர்கள் ஏதோ ஒரு காரணத்தால். அவர்கள் என்ன தான் முயற்சி செய்தாலும் ஓட்டு போட முடியாது...

3) வாக்கு செலுத்த விருப்பம் இல்லாதவர்கள் (இவர்கள் நோட்டா குரூப். அப்படி

போட்டாலும் நோட்டா தான். கண்டிப்பாக இவர்கள் ஊழல் அரசுக்கு வாக்கு அளிக்க மாட்டார்கள்)

4) உடல் நலம் முடியாத முதியவர்கள், ஊனமுற்றவர்கள், மிகுந்த உடல் நிலை சரி இல்லாதவர்கள்.

5) பொருளாதாரம் தேடி வேலைக்கு வெளியூர் சென்றவர்கள் மற்றும் விடுமுறை இல்லாமல் உழைப்பவர்கள்.

6) மிக முக்கிய விடயமாக வெளியூர் சென்றவர்கள். (மரணம் கூட காரணம்)

7) சந்தர்ப்ப சூழ்நிலையால் வேறு ஊரில் இருப்பவர்கள். தன் வாக்கை அந்த ஊருக்கு மாற்ற முயற்சித்துக் கொண்டு இருப்பவர்கள்.

8) அலட்சியம் ...

மேற் குறிப்பிட்ட பிரிவில் அந்த 8 வது பிரிவு மட்டுமே விமர்சனத்திற்கு உட்பட்டவர்கள்.

இந்த பிரிவினர் நம் சமூகத்திற்கு பயனற்று இருப்பவர்கள். இவர்கள் நிச்சயம் மாற வேண்டியவர்கள்.

விலை மதிப்பு இல்லாதது நம் ‘‘வாக்குரிமை‘‘ .

அதை வீண் அடிக்கவும் வேண்டாம். பயன்படுத்தாமல் இருக்கவும் வேண்டாம்.
5 வருடத்திற்கு ஒரு முறை நம் வாழ்க்கையை தீர்மானிக்க வரும் அரிய வாய்ப்பு.
எப்பாடுப்பட்டாவது அதை திறம் பட பயன்படுத்த உறுதி கொள்வோம்.

**- மன்னை செந்தில் பக்கிரிசாமி**

# ஏறு தழுவுதல் (சல்லிக்கட்டு) வரலாறு



மணிபாரதி தங்க சுந்தர்

ஏறு தழுவுதல் என்ற சொல்லில் இருக்கிறது தமிழ் இனத்தின் மாண்பு.. வருடம் முழுவதும் செல்லமாக வளர்க்கும் தன் மாட்டினை வருடத்தில் ஒரு நாள் வீரத்துடன் தழுவும் வீரவிளையாட்டு தான் சல்லிக்கட்டு....

பெயர் காரணம்:

ஏறு என்பது மாட்டை குறிக்கும் அதை வீரத்துடன் தழுவுவதால் ஏறு தழுவுதல் என்று பெயர். சல்லி என்பது விழாவின் போது மாட்டின் கழுத்தில் கட்டப்படும் வளையத்தை குறிக்கிறது. புளியங் கம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணியும் வழக்கம் தற்போதும் உள்ளது. 50 ஆண்டுகளுக்கு முன்பு புழக்கத்தில் இருந்த சல்லிக்காசு எனும் நாணயத்தை துணியில் கட்டி மாட்டின் கொம்பில் கட்டி விடும் பழக்கம் இருந்தது. மாட்டை அணைக்கும் வீரருக்கு அந்த பணமுடிப்பு சொந்தமாகும்.

இந்தப் பழக்கம் பிற்காலத்தில் சல்லிக்கட்டு என்று மாறியது. பேச்சு வழக்கில் அது திரிந்து சல்லிக்கட்டு என்றானது என்றும் கூறப்படுகிறது.

வகைகள்:

வேலி சல்லிக்கட்டு:

வேலி மஞ்சு விரட்டு எனப்படும் விளையாட்டில் திடலில் காளைகள் அவிழ்த்து விடுவார்கள். அவை எந்தக் கட்டுப்பாடும் இல்லாமல் ஓடுவதும் அவற்றை இளைஞர்கள் விரட்டுவதும் நடைபெறுகிறது

வடம் சல்லிக்கட்டு:

வட தமிழகத்தில் வடம் மஞ்சு விரட்டு என்ற பெயரில் 20 அடி நீளக் கயிற்றில் காளையை கட்டி இருபுறமும் ஆண்கள் இழுத்து பிடிக்க சிலர் அதன் கொம்பில் இருக்கும் பணமுடிப்பை எடுக்க முயற்சி செய்வார்கள்.

வாடிவாசல் சல்லிக்கட்டு:

வாடி வாசலில் இருந்து சீறி பாய்ந்து சுற்றி சுழன்று அடிக்கும் காளைகளை வீரர்கள் அடங்குவார்கள்.

<u>சல்லிக்கட்டு பொது விதிகள்:</u>

1. விளையாட்டின் நோக்கம் காளையை அடக்குவது
2. போட்டியாளர்கள் காளையின் திமிலை பிடித்து மட்டுமே அடக்க வேண்டும்
3. போட்டியாளர்கள் காளையின் திமிலை பிடித்து எல்லைக்கோடு வரை வர வேண்டும்.
4. எல்லைக்கோட்டுக்குள் காளையின் திமிலை யாராலும் பிடிக்க முடியவில்லை என்றால் காளை வெற்றி பெற்றதாக அறிவிக்கப்படும்
5. காளையின் திமிலை ஒரு போட்டியாளர் மட்டுமே பிடிக்க வேண்டும்

வரலாறு (சங்க இலக்கிய நூல்களில்):

பழந்தமிழ் நூலான கலித் தொகையின் முல்லைக் கலியில் இடம்பெறும் பாடல்களில் ஏறு தழுவுதல் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. மலைபடுகடாம் நூலிலும், பட்டினப்பாலையிலும் சிலப்பதிகாரத்திலும் ஏறு தழுவுதல் பற்றிய தகவல்கள் உள்ளன.

குறிஞ்சி நில மக்களும் முல்லை நில மக்களும் தங்கள் நிலங்களில் உள்ள வலிமை வாய்ந்த எருதுகளை ஒன்றுடன் ஒன்று மோத செய்து ஆரவாரம் செய்து இவ்வெருதுகளின் வெற்றியை தங்கள் வெற்றி போல் எண்ணி மகிழ்வர். ஏறு தழுவுதலுக்கு முதல் நாள் குரவைக்கூத்து நடைபெறும். முதல் நாள் நடந்தால் பெண்கள் ஏறு தழுவும் வீரன் வெற்றி பெற வேண்டிப்பாடுவர். ஏறு தழுவும் நாளின் மாலையில் குரவைக்கூத்து நடைப்பெற்றால் வெற்றி பெற்ற வீரனின் வெற்றியை புகழ்ந்து பாடுவர்.

வளமுடைய இளைய காளையை அடக்கி ஏறியவருக்கு உரியவள் இம்முல்லை மலரை அணிந்துள்ள மென்மையான கூந்தலையுடைவள் என ஆராய்ச்சியாளர்கள் ஆடிப்பாடுவதை சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது...

கலித் தொகையின் முல்லைக் கலியில் இடம்பெறும் பகுதியில் மாடுகளின் நிறம், வகை, வீரம், அதனை அடக்கும் இளைஞர்களின் செயல், பரண் மீது அமர்ந்து ஏறு தழுவுதலை பார்க்கும் பெண்களின் பேச்சு, அவர்களின் பெற்றோர்களின் இயல்பு யாவும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளன..

பிடவம்பூ, செங்காந்தள் பூ,காயாம் பூ உள்ளிட்ட மலர்களை அணிந்த ஆயர்கள் தம் காளையை அடக்குபவர்களுக்கு தம் மகளை தருவதாக உறுதியளித்து சிவபெருமானின் குந்தாலிப்படை போன்று மாட்டின் கொம்பினை கூர்மையாக சீவினர். அவ்வெருதுகள் இடி ஒலி போல முழக்க மிட்டுத் தொழுவுக்கு வந்தன. அந்த எருதுகளை தழுவியவருக்கு அளிப்பதாகச் சொன்ன மகளிர் வரிசையாக நிற்பர்.

ஏறுதழுவதற்கு முன்பாக அத்தொழிலில் ஈடுபடும் இளைஞர்கள் நீர்த்துறைகளிலும், ஆலமரத்தின் கீழும் உள்ள தெய்வங்களை வணங்கி முறைப்படி தொழுவில் பாய்ந்து காளைகளை அடக்குவர். அவ்வாறு அடக்க முற்படுவனின் மார்பைக் காளைகள் குத்திக்கிழிப்பது உண்டு என்று முல்லைகலியில் விளக்கப்பட்டுள்ளது.

ஒரு காளை மாடு இளைஞன் ஒருவனை கொம்பால் குத்துகிறது..அவன் குடல் சரிந்து வெளி வருகிறது. அவற்றை அவன் எடுத்து வயிற்றில் இடுகிறான். வேறொரு காளை மாட்டில் தொத்திக் கிடப்பவன் காளை மாட்டின் மேல் இடப்பட்ட மாலைப்போல் இருந்தான் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. பலரை மாடுகள் குத்திக் கிழிப்பதால் மாடு பிடி களம் குருதிக் கறையுடனும் மரண ஒலத்துடனும் விளங்கியுள்ளது.

எனவே நம் முன்னோர்கள் பல் உயிர்களை கொல்ல வாய்ப்புள்ள இடமாகவும், பலருக்கு காயம் முதலியன விளைவிக்கும் இடமாகவும்,நிகழ்வாகவும் உள்ளதை நன்கு அறிந்த சூழலிலும் ஏறு தழுவுதலை வீரக்கலையாகவே ஏற்றுக்கொண்டிருந்தனர்.

கொலை தொழிலையுடைய காளையை அடக்கும் வலிமையில்லாதவனை பண்டைக்கால ஆயமகளிர் மணப்பது இல்லை. எனவே தமிழர்களின் திருமண வாழ்வுடன் தொடர்புடைய ஏறு தழுவுதல் தமிழினத்தின் மிகப்பெரிய அடையாளமாக கருதலாம்.

நன்றி

இணையத்தால் சேர்ந்து. இதயத்தால் இணைந்து உலகம் போற்றும் அறப்போராட்டத்தை நடத்தி ஏறு தழுவுதலை மீட்டெடுத்த என் தாய் தமிழ் சொந்தங்களுக்கு சமர்ப்பணம்...

**- மணிபாரதி தங்க சுந்தர்**

# கேள்வி ?



ராஜேஷ்
மன்னை

வாழப் பிறந்த உனக்கு
கேட்க என்ன தயக்கம்..

மன்ற உறுப்பினரை கூட
கேள்விக் கேட்க மணமில்லாத
மான தமிழா...

சோத்தில் உப்பை குறைகண்ட உனக்கு
சாலையில் குப்பை
தெரியவில்லையா ?

அரிதாரம் பூசியவனிடம்
அடுக்குகிறாயே கேள்வியை...

உன்னை ஆள்பவனிடம் கேட்க
ஆண்மை இல்லையா உனக்கு?

அடுத்த வீடுப் பற்றி எரிவதை
அலட்சியமாய் பார்பவனே

அது உன் வீட்டிற்குமான
கொல்லி என உணர்வது எப்போது?

இலக்கை நோக்கிப் பயணிக்காத
எந்த அம்பும்
இலக்கை அடைந்ததாக
சரித்திரம் இல்லை.

இறக்கப் பிறந்த உனக்கு
கேட்க என்ன தயக்கம்...



கிறிஸ்ட்
கைவண்ணத்தில்

# நாகரிகம் என்ற பெயரில் அழிந்து வரும் கலாச்சாரம்



மன்னை ரஞ்சித்

இருபத்தோராம் நூற்றாண்டில் வளர்ந்து வருகிறோம் என்பதனால் என்னவோ நம் கலாச்சாரத்தை அழித்துவிட்டு பெயர் அளவில் மீட்டெடுக்கிறோம் என்று பயணித்து வருகிறோம்.

இதை நம் பழக்க வழக்கம், உடை, உணவு என்று ஒவ்வொன்றிலும் எடுத்துக்காட்டி சொல்லலாம்.

குழந்தையை சிறு வயதிலேயே பள்ளிக்கு அனுப்பி அறிவு சார்ந்து வளர ஆசைப்படும் நாம், சொந்த பந்தங்கள் அவர்களுக்கான மரியாதைப் கொடுப்பது அவர்களுடன் எப்படி பேசுவது என்பதை சொல்லிக்கொடுக்க தவறுகிற நாம், பிள்ளை வளர்ந்தப் பின்பு உறவினர்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை, பேச்சு, வளர்ப்பு சரியில்லை என பிள்ளையின் மீது பழியை போட்டுவிட்டு நாம் விலகி நிற்கிறோம்.

உணவு வகையில் நாம் நாகரிகத்தை மட்டும் இழக்கவில்லை மாறாக ஆரோக்கியத்தையும் இழந்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

Fast-food மோகம் நம்மை ஆட்டிவைக்கிறது என்பதை மறுக்க முடியுமா? தேநீர் கடையில் நின்று வடை சாப்பிடுவது அசிங்கம் என கருதும் நாம், பெருங்கடையில் சென்று பப்ஸ் கேக் சாப்பிடுவதை கவுரவமாக கருதுகிறோம்.

நம் ஒட்டுமொத்தக் கலாச்சாரமும் சீரழியும் முக்கியமான இடம், நாம் அன்றாடம் பார்க்கும் தொலைக்காட்சியில்தான் சில அலைவரிசைகள் தனது TRBயை அதிகரிக்க செய்யும் மிக கேவலமான செயல் பெண்களை காட்சிப்பொருளாக வைத்து நடத்தும் சில நிகழ்ச்சிகள் தான்.

அதை பொழுதுபோக்கு நிகழ்வு என நாம் பிள்ளைகளோடு இதனை வீட்டில் பார்க்கிறோம். அறிவுச்சார்ந்த பல நிகழ்வுகளும், விளையாட்டு நிகழ்வுகளும் இருக்கும் போது இது போன்ற நிகழ்ச்சிகளை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டிய விடயம்.

அழிவின் வழி செல்லாது ஆரோக்கியமான கருத்தியலோடு வாழ்வோம்.

# உழவா போர்



ம. மணிவர்மன்

குறள்:
சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

மு வ உரை:
உலகம் பலத் தொழில் செய்து சுழன்றாலும். ஏர்தொழிலின் பின் நிற்கிறது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுதொழிலே சிறந்தது.

மாடு பூட்டி உழவுசெய்து களைக்காத மூத்தோர்..
கையில் அறுத்து கல்லில் நெற்கதிர் அடித்து சோர்வாகாத மூத்தோர் ...

பெற்றெடுத்த நெல்மணிகளை பல தொலைவு சுமந்தும் அசராத மூத்தோர்...

கடின உழைப்பாயினும்
சோர்வுறா அன்றைய விவசாயம் ...

நீரினால் மட்டும் இன்றி
விலை நிர்ணயத்தாலும் தடைபட்டுள்ளது ...

நவீன காலத்திலும்
சாப்பாடு விவசாயத்தை நம்பித்தான்.

நிலத்தை உழுவது முதல்
அறுவடை வரை இயந்திரம்...

எளிமையாக இருப்பினும் பின்னுக்கே செல்லுது விவசாயம்

காலத்தின் மாற்றம் விவசாயத்தை அரசு ஊக்கப்படுத்தி இருக்க வேண்டும்.

இயந்திரத்திற்கும் எரிபொருளுக்கும் தகுந்த விலை

விளைவிக்க தன் உழைப்பை உரமிட்ட விவசாயிகளுக்கு ஏன்
நியாயமற்ற விலை நிர்ணயம்?

அரசு அங்காடிகளில் இலவச அரிசிக் கொடுத்து விளைவிக்கும் விவசாயியை கையேந்தவிட்ட அரசு.

தகுந்த நேரத்தில் நீரும்
விளைவித்தவன் நிர்ணயிக்கும் விலையை கொடுத்தால்
ஏன் தேவை உமது இலவசம்?

உழவர் திருநாளுக்கு உழவு செய்த நெல்லில் பொங்கல் வைத்த வழக்கத்தை மாற்றி இலவசத்திற்கு கையேந்தவிட்ட பொருளில் பொங்கல் வைக்கும் வழக்கமாக்கப்பட்டுள்ளது.

சிறப்பாக நீரில்லாததால் விவசாயம் அழிந்தது என்று பிற மாநிலத்தவரை குற்றம் காட்டி தனது பாதுகாப்பை தேடி கொண்டுள்ளாய். நாகை, திருவாரூர் பகுதிகளில் பெருமளவில் விவசாய நிலம் கைப்பற்றப்பட்டு எண்ணெய் நிறுவனம் செயல்படுகிறது.

விவசாய நிலத்தை அழித்தொழித்தது
விவாசாயிகள் தற்கொலை தொடருது..

தலைமுறைக்கும், நடைமுறைக்கும் உணவளிக்கும் விவசாயிகளின் வறுமை, உயிர் இழப்புகள் எல்லாம் இரத்தஓட்டம் இல்லா அரசுக்கு நகைச்சுவை விருந்து.

அனைத்து பிரச்சினைகளையும் செய்திதாளில் படித்துவிட்டு தேநீர் அருந்தி வீடு திரும்பினால் ஜனநாயகவாதியகவும் வளம்காக்க உரிமை கேட்டால் தீவிரவாதியாகவும் கருதுகிறது அரசு ...

**ம. மணிவர்மன்**
திருராமேஸ்வரம்.

# தடம் மாறிய தற்சார்பு



ரா. ராஜராஜன்
மன்னார்குடி

புரிந்துகொள்ள முடியாத, நேரடியாகத் தொடர்புகொள்ள முடியாத ஒரு பெரிய அமைப்பின் பிரிக்க முடியாத உறுப்பாக நாம் இருக்கும் போது நமக்கு உண்மையில் சுதந்திரம் என்பதே இல்லை. ஒரு மனிதன் தன் வாழ்க்கையை தானே தீர்மானிக்கக் கூடியவனாக இருக்க வேண்டும். அதற்கு அவன் தன் சமூகத்தை தானே தீர்மானிக்கும் உரிமையுடன் இருக்க வேண்டும்.

-மகாத்மா காந்தி

நிகழ்கால நிகழ்வுகள் தான் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன என்கிறது கோயஸ் தியரி.நிகழ்வுகளின் கோர்வை தான் வாழ்க்கை. ஒரு சில தனிப்பட்ட நிகழ்வுகள் எப்படி நம் வாழ்வை மாற்றி அமைக்கின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருப்போம். இதே போன்று தான் அரசுகளும் அதன் முடிவுகளும் நாட்டு மக்களின் வாழ்க்கையை தீர்மானிக்கின்றன. அரசுக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. எங்கள் அரசு எங்களுக்கு எதுவுமே செய்ததில்லை. எங்களுடைய வாழ்க்கையை நாங்கள் தான் பார்த்துக்கொள்கிறோம் என நீங்கள் நினைப்பது தெரிகிறது இப்படி உங்களை நினைக்க வைத்ததும் இவ்வரசுகள் தான்.

நல்லா படிச்சு, நல்ல வேலைக்கு போய், நல்லபடியா கல்யாணம் பண்ணி, குழந்தை பெற்று, வீடு கட்டி, குழந்தைகளை நல்ல படியா படிக்க வைத்து, அவர்களுக்கு நல்ல விதமாக கல்யாணம் செய்து வைத்து, சொத்து சேர்த்து, அவர்களின் குழந்தைகளை பார்த்துவிட்டால் நிறைவான வாழ்க்கை வாழ்ந்துவிட்டதாக நாம் எண்ண வைக்க படுகிறோம். இது தான் வாழ்க்கைக்கான சூத்திரம். இந்த சூத்திரத்தின் அடித்தளமாக இருப்பது நன்றாக படித்து, நல்ல வேலைக்கு செல்வதென்பது தான்.

இதன் மூலம் ஏனைய மைல்கல்களை நம்மால் எட்ட முடியும் என நம்புகிறோம். ஆம் மேலோட்டமாகப் பார்த்தால் இது தானே வாழ்க்கை என தோன்றும். அதெப்படி இவ்வளவு மனிதர்கள், விதவிதமான சிந்தனைகள் இருக்கும் பொழுது கூட நாம் எப்படி ஒரே மாதிரியான சூத்திரத்தை கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயந்திரங்கள் தானே இப்படி இருக்கும். ஆம் நாமும் அப்படி தான் இயந்திரப்படுத்த பட்டுள்ளோம்.

எப்படி இதெல்லாம் நடக்கும். என் வாழ்க்கையில் அனைத்து முடிவையும் நானே

தான் யோசித்து எடுக்கிறேன். என்னை யாரும் கட்டு படுத்த இயலாது என நினைக்கிறீர்களா. ஆம் முடிவுகளை நீங்கள் தான் எடுக்கிறீர்கள் . ஆனால் அவை அனைத்தும் ஓர் வட்டத்துக்குள்ளேயே இருக்கும் படியாக இங்கு கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது. அவ்வட்டதை தாண்டி செல்பவரை நாம் உதாசீன படுத்தி வட்டத்திற்குள் இழுத்திடுவோம். இன்னும் சுருக்கமாக சொல்ல வேண்டுமாயின் சர்க்கஸில் சுற்றும் சிங்கம் போல. சிங்கம் என்றால் காட்டில் வாழ வேண்டும். அது தான் சிங்கத்தின் வாழ்க்கைமுறை. கூண்டில் வளர்க்கப்படும் சிங்கம் சிங்கமாக வளராது. அதுபோல் தான் மனிதர்களின் வாழ்க்கையும். இப்பொழுது மேலே குறிப்பிட்ட சூத்திரத்தை ஓர் முறை படியுங்கள் உங்களுக்கு புரியும்.

பிரதமர் நேரு அவர்கள் மேற்குலக சித்தாந்தமும், பொருளாதார திட்டங்களும், அறிவியல் தொழிற்வளர்ச்சியும் தான் நாட்டை ஒற்றுமையாகவும் வறுமையை போக்கவும் பயன்படும் என முழுக்க நம்பினார். இதற்க்கு அடிப்படையாக கல்விமற்றும் தொழிற்துறை வளர்ச்சியே பிரதானமானது என்பதனை அடிப்படையாக கொண்டு தன்னுடையத் திட்டங்களை முன் வைத்தார். ஆம் அவருடைய ஆட்சி காலத்தில் நாடு முழுவதும், பள்ளிகள், கல்லூரிகள் அமைக்கப்பட்டு கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதன் மூலம் சமத்துவத்தையும் தொழிற்துறை அறிவையும் வளர்க்கலாம் என எண்ணினார்.

அடுத்ததாக பெரும் தொழிற்சாலைகளை நாடுமுழுவதும் ஏற்படுத்தி தொழிற்துறையை வலுவாக்கினார். இந்தத் தொழிற்வளர்ச்சிக்கு தேவையான அடிப்படை கட்டமைப்புகளான சாலைகள், தொடர்வண்டி பாதைகள், குடியிருப்புகள், மருத்துவமனைகள் என அனைத்தும் அப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டன. இத்திட்டங்களை இந்தியாவில் செயல்படுத்திய ஒருசில மாநிலங்களில் தமிழகம் முதன்மையானது. இங்கு காமராஜர் பள்ளி, கல்லூரிகள், போக்குவரத்து வசதிகள், பாலங்கள், அணைகள், அணுமின் நிலையங்கள், அனல்மின் நிலையங்கள், உருக்கு ஆலைகள் இன்னும் பல தொழிற்சாலைகளை நிறுவினார் .

இங்கு தான் ஓர் மிகப்பெரும் மாற்றம் மக்களின் வாழ்க்கை முறையிலும் மன நிலையிலும் ஏற்பட்டது. அதுவரை கிராமிய பொருளாதாரத்தில் திளைத்த மக்கள் தொழிற்சாலையில் வேலைக்காக அந்நகரங்கள் நோக்கி பயணிக்க ஆரம்பித்தனர். மாத நிரந்தர வருமானம் கிடைத்ததால் பெரும்பான்மையானோர் தொழிற்சாலை மற்றும் உள்கட்டமைப்பு வேலைக்கு செல்லலாயினர். பள்ளி கல்லூரிகளில் படித்தவர்களுக்கும் படித்து முடித்து தொழிற்சாலைக்கு வேலைக்கு செல்ல வேண்டும் என்றே பயிற்றுவிக்கப்பட்டன. இக்காலகட்டத்தில் தான் நன்றாக படித்து நல்ல வேலைக்கு செல்லவேண்டும் என்றதொரு எண்ணம் மக்கள் மனதில்

விதைக்கப்பட்டது.

ஒருபுறம் கல்வியும் தொழிற்வளர்ச்சியும் முன்னேறிக்கொண்டிருக்க மறுபுறம் இத்திட்டங்களின் பாதிப்புகளை நேரு தன்னுடைய இரண்டாம் ஆட்சி காலத்தில் எதிர்நோக்க வேண்டியிருந்தது. குறிப்பாக விவசாயம், கால்நடை வளர்ப்பு, நெசவு போன்ற துறைகளில் ஈடுபட்டிருந்தோரும் அவர்களுடைய அடுத்த தலைமுறையும் தொழிற்சாலைகளை நோக்கி நகர்ந்தக் காரணத்தால் உற்பத்தி குறைந்து வந்தது. இதனால் தன் திட்டங்களை சுயமதிப்பீடு செய்ய நினைத்த நேரு திட்டக்குழு உறுப்பினரான ஜெ .சி. குமரப்பாவை அணுகி தான் மேற்கொண்ட வளர்ச்சி திட்டங்களின் விளைவுகளை பற்றி அறிக்கை தாக்கல் செய்ய சொன்னார்.

அதற்கு பதிலளித்த குமரப்பா அவர்கள் ‘‘ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒரு திட்டத்தை நிறைவேற்றும் முன்பு, அங்கே இருக்கும் ஏழைகளின் விலா எலும்புகளை பார்ப்பேன். அந்த திட்டம் செயல்படுத்தப்பட்ட பின்பு, அதே ஏழைகளின் விலா எலும்புகளில் ஏதேனும் சதைப்பற்று காணப்படுகிறதா எனப் பார்ப்பேன். அப்படி காணப்பட்டால் அந்த திட்டம் வெற்றி எனக் கருதுவேன்‘‘ என்றார். சுதாரித்து கொண்ட நேரு உருக்கு மற்றும் தொழில்துறை அமைச்சராக சிறப்பாக பணியாற்றிய சி.சுப்பிரமணியம் அவர்களிடம் விவசாய துறையை ஒப்படைத்தார். இருவரும் இணைந்து உற்பத்தியை பெருக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் பொழுதே நேரு உயிரிழந்தார்.

இதன் பிறகு பொறுப்பேற்ற லால் பகதூர் சாஸ்த்ரி அவர்கள் நேருவின் சோசியலிச கொள்கைக்கு மாற்றாக காந்தியின் கிராமப் பொருளாதாரத்தை நோக்கி முன்னெடுப்புகளை செய்யலானார். அதே நேரத்தில் வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பில் தொழிலாளர்கள் பற்றாக்குறையை போக்க இயந்திரங்களை அறிமுகப்படுத்தினார். சி. சுப்பிரமணியனை கொண்டு வெண்மை புரட்சி மற்றும் பசுமை புரட்சி என்ற திட்டங்களை நிறுவி வேகமாக வீழ்ந்துவரும் உற்பத்தியை உடனடியாக உயர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டார்.

உடனடி உற்பத்தி தேவைக்காக புதியமுறையை கையாளும் விதமாக வெண்மை புரட்சிக்கு வர்கீஸ் குரியன் அவர்களையும் பசுமை புரட்சிக்கு எம்.எஸ் சுவாமிநாதன் அவர்களையும் ஆலோசகர்களாக்கினார் சுப்பிரமணியம். இதற்கிடையில் சாஸ்திரி அவர்கள் இறந்து இந்திரா அவர்கள் பிரதமராகியிருந்தார். தமிழகத்தில் திமுகவும் சில வருடங்களில் ஆட்சியை பிடித்திருந்தது.

தொழிலாளர்கள் பெரும்பாலும் நகரத்தை நோக்கி நகர்ந்ததால் நில உரிமையாளர்களே இயந்திரங்கள் மற்றும் எஞ்சியிருந்த தொழிலாளர்களை கொண்டு உற்பத்தியை பெருக்க ஆரம்பித்தனர். குறிப்பாக பசுமை புரட்சியால் உற்பத்தி

அதிகமாக ஆரம்பித்தது. நில உரிமையாளர்கள் மென்மேலும் பணம் சம்பாதித்தனர். இதனை கட்டுப்படுத்த தமிழகத்தில் கருணாநிதி நில உச்சவரம்பு சட்டத்தை கொண்டு வந்து நில உரிமையாளர்களிடம் இருந்த அதிகபட்ச நிலங்களை அத்தொழிலாளர்களுக்குப் பிரித்து கொடுத்தார். கம்யூனிச சித்தாந்தத்தில் ஆர்வம் கொண்ட இந்திரா அவர்களும் இதனை நாடு முழுவதும் அமல் படுத்த முயன்றார். இச்சட்டத்தால் மீண்டும் வேளாண்மையில் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்தது.

இந்திராகாந்தியின் இரண்டாம் ஆட்சி காலத்தில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியால் நாடு முழுவதும் ஏற்படுத்தப்பட்ட எமெர்ஜென்சி மக்களின் மனநிலையில் ஓர் நிச்சயமற்ற உணர்வை அழுத்தமாக ஏற்படுத்தியது. எதிர்ப்பை வெளிப்படுத்தினால் அதிகார வர்கத்தினால் அடக்கப்படுவோம் என்றும் அடக்குமுறையிலிருந்து தப்பிக்க வேண்டுமெனில் அதிகாரவர்கத்திற்குப் பணிந்து செல்ல வேண்டும் என்பதையும் எமெர்ஜென்சி கற்றுக் கொடுத்தது. தொழிற்சாலையில் வேலை பார்த்த அனைவருக்குள்ளும் வேலை பாதுகாப்பு பற்றிய அச்சம் நிலவியது. வேலைக்கு போனால் தான் ஊதியம், அதை வைத்து தான் குடும்பத்தை நடத்தும் சூழல் என மாறிய  வாழ்க்கைமுறையால் அனைவரும் நிலைகுலைந்து போயிருந்தனர்.

அனைத்துத்துறையிலும் தன்னுடைய மேலதிகாரிகள், நிர்வாகம், அரசு என மேலுள்ளவர்களின் சொல்லுக்கு கட்டுப்பட்டு வேலை செய்வதே பாதுகாப்பான வழிமுறை என உளவியல் ரீதியாக பதியவைக்கப்பட்டது. வேலைக்கு விசுவாசம் என்பது மாறி அதிகாரத்தில் உள்ளோருக்கு விசுவாசம் என்றானது. இச்சூழல்களால் படித்து வேலைக்கு சென்று அவ்வேலையை காப்பாற்றி கொள்ள வேண்டும் என்று மக்கள் மனதில் இயல்பாக பதிய ஆரம்பித்தது.

அதேநேரத்தில் பசுமை புரட்சியின் மற்றொரு கோரமுகத்தை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அனைத்திற்கும் உரங்களும், பூச்சி கொல்லிகளும் அதிகளவில் தேவை பட்டன. இதனால் உற்பத்தி செலவு அதிகமானது. நீரின் தேவை அதிகரித்தது. ரசாயனக் கலப்பினால் மண்ணும் உற்பத்தியும் நஞ்சாகிபோகின. மீண்டு வந்து வேளாண் தொழிலில் ஈடுபட்டவர்களுக்கு இது மிகப்பெரும் சரிவை ஏற்படுத்தியது. மறுபடியும் இம்மக்கள் தொழிற்சாலையை நோக்கி நகர ஆரம்பித்தனர். பெருவாரியான படித்தவர்களும் தொழிலாளர்களும் தொழிற்சாலை வேலைக்கு செல்வதையே குறிக்கோளாக கொண்டதால் அவர்கள் அனைவருக்குமான வேலைவாய்ப்பை அளிக்கும் நிலையில் நாடு இல்லை.

இக்காலகட்டத்தில் மனிதர்களுக்கு இடையேப் போட்டி பொறாமைகள் அதிகரித்து தன்னை மட்டுமே தக்கவைத்து கொள்வதே புத்திசாலி தனம் என்ற சமூக கருத்தியல் ஆழமாக விதைக்கப்பட்டது. குடும்பங்கள் தனி குடும்பங்கள் ஆகின. மக்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய வாழ்க்கையை தக்கவைக்கும் போராட்டத்தில்

இருப்பதாக எண்ண வைக்க பட்டிருந்தனர்.

அடுத்ததாக நரசிம்மராவ் ஆட்சி காலத்தில் மன்மோகன் சிங் அவர்களின் மூலம் உள்நாட்டு சந்தையை உலக நாடுகளுக்குத் திறந்துவிடும் உலகமயமாக்களை கொண்டுவந்தனர். அதுவரை பாதுகாக்கப்பட்ட இந்திய சந்தையில் வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் பொருட்களின் விற்பனையை தொடங்கின, பல வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலையை இங்கு ஆரம்பித்தன. இறக்குமதி வரி தளர்த்தப்பட்டதால் இறக்குமதியாகும் மூல பொருட்கள் அதிகமாகின. இதன் மூலம் வேலையில்லா திண்டாட்டம் ஒய்ந்து பெரும்பாலானோருக்கு வேலை கிட்டியது. அதே காலகட்டத்தில் சிறு தொழிலகங்கள் வெளிநாட்டு தொழிற்சாலைகளிடம் போட்டிபோட இயலாமல் மூடப்பட்டன.

எவ்வளவுக்கெவ்வளவு உற்பத்தி செய்ய படுகிறதோ அதனை இங்கேயே சந்தை படுத்த ஆரம்பித்தனர். தொலைக்காட்சி வருகை மற்றும் விளம்பரத்தின் மூலம் தேவையோ இல்லையோ அப்பொருட்களை வாங்க மக்கள் தூண்டப்பட்டனர். அதனால் செலவுகளும் அதிகமாகின. தேவைக்கான உற்பத்தி என்றிருந்த நிலை மாறி உற்பத்திக்கான தேவை என்றாகியது. இந்த நுகர்வு சந்தை பொருளாதாரம் அனைத்துவிதமான நியாய தர்மங்களை ஒதுக்கி வைத்து பணம் சம்பாதிப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்க ஆரம்பிப்பித்தது.

இதனால் இயற்கை, சக உயிர்கள் என பாரபட்சம் இன்றி பணம் சம்பாதிப்பதற்காக அனைத்து அநியாயங்களையும் நியாயப்படுத்த ஆரம்பிக்கும் பழக்கமும் அது தான் புத்திசாலி தனம் என்றும் பயிற்றுவிக்கப்பட்டது .அனைத்தும் வியாபார கண்ணுடன் பார்க்கப்பட்டதால் அதிக விலை உள்ளது சிறந்தது என்றதொரு பிம்பமும் மக்கள் மனதில் நிறுத்தப்பட்டது. அப்பொழுது ஒருவரை ஒருவர் சுரண்ட தயங்காத வாழ்க்கைமுறையில் வந்து நிற்கிறோம்.

அரசின் ஒருசில திட்டங்கள் நம்மை உளவியல் ரீதியாக எப்படி பழக்கப்படுத்தியுள்ளது என்பதை உணர்வோம். இனியும் இப்படியே இருப்போமாயின் மனிதர்கள் வாழும் பூமியில் மனிதமே கிடையாது என்னும் நிலையை தான் எட்ட வேண்டிவரும். நல்லா படிச்சு, நல்ல வேலைக்கு போய் என்னும் சூத்திரம் தான் வாழ்க்கையா என யோசிக்க ஆரம்பிப்போம். ஆயிரம் வழிமுறை நமக்கு கிட்டும். நம்முடைய வாழக்கையை நாமே தீர்மானிக்க முயல்வோம். முறையான வாழ்க்கையை வாழ முயற்சிப்போம்.

- ரா.ராஜராஜன், மன்னார்குடி

# துடிப்பு

செவ்விதழ்கள் குவிந்து நின்று
துடிக்கும் போதும்,

கண் இமைகள் தயக்கத்தோடு
துடிக்கும் போதும்,

உள்ளிருக்கும் இதயம் எதையோ சொல்லத்
துடித்துடித்துக் கொண்டிருக்கிறது
என்று உணர்ந்து கொள்வது திறமை.

இதயத் துடிப்பு அடங்கிய பின்
ஏங்கித் தவிப்பது
மடமை...

ம. ரேணுகா
மன்னார்குடி

# நீயே வேண்டும்

உன் முதல் வரியும்
முகவரியும் நானாக வேண்டும் ...

உன் கைவிரலும்
கண்ணிமையும் நானாக வேண்டும் ...

உன் மெல்லிதழும்
புன்னகையும் நானாக வேண்டும் ...

உன் காலைப்பொழுது தொடங்கி
நீ கண் அயரும் வரை
உன் எதிரே நான் மட்டுமே வேண்டும் ...

அன்பும், காதலும்
அழிவதில்லை என்பது உண்மையானால்
நான் நீயாக வேண்டும்

க. உதயநிதி
இளங்கலை ஆங்கிலம் இரண்டாம் ஆண்டு,
மன்னை இராசகோபாலசுவாமி அரசினர் கலைக்கல்லூரி.

# பெண்ணே

அடிமைத்தனம்
எங்கள் மொழியல்ல...

அடிமைத்தனம்
எங்கள் வலியாகிறதே...

சிறகொடிய
நாங்கள் விரும்பவில்லை...

சிறகொடிக்க
படுகிறோம் நிதமும்...


சிந்தனைகளை
சிதைய வைக்காதீர்கள்...

சுயத்தை இழக்க விருப்பமில்லை

பெண்தானே என்று நகைக்காதே
நாளையே நாங்கள் தான்...

ஏளனத்தை கண்டு துவளாதே
பிறருக்கு எடுத்துக்காட்டாய் திகழ்ந்திடு

சுற்றம் ம(து)றந்து வெளியே வா...
சுதந்திர வானில் பறந்திட வா...
எட்டுத் திக்கும் உனதாக்கிட வா...




ஓவியம்
**திவ்யா ராஜராஜன்**

**T. பாரதி கண்ணம்மா**
மூன்றாமாண்டு Bsc., Ed.,
பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி
தஞ்சாவூர்

# ஆரோக்கியத்திற்கான முதற்படி



ராணிச்சந்திரன்
மன்னார்குடி

நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்றால் முதலில் பேதி மருந்து சாப்பிடும் பழக்கத்தை கொண்டு வர வேண்டும். முன்பு சித்த வைத்தியத்தில் நோய் என்று வருபவர்களுக்கு முதலில் பேதி மருந்து தான் கொடுப்பார்கள். அதிலேயே 50 சதவிகிதம் பேருக்கு நோய் குணமாகிவிடும். 50 சதவிகிதம் பேருக்கு 3 நாள் மருந்தில் குணபடுத்தி விடுவார்கள். அந்த பேதி மருந்து சாப்பிடுவதால் 6 மாதத்திற்கு எந்த நோயும் வராத வண்ணம் எதிர்ப்புசக்தியோடு உறுப்புகள் வலுபட்டுவிடும்.

அப்படிப்பட்ட பேதி மருந்தை நாம் சாப்பிடுகிறோமா? சாப்பிட்ட நினைவு எத்தனை பேரிடம் இருக்கிறது? மதிய உணவு சாப்பிட்ட பாத்திரத்தை கழுவி விட்டு இரவு சாப்பிடும் நாம், உணவை அரைத்த இந்த இயந்திரத்தை சுத்தம் செய்கிறோமா?

நாம் அனைவரும் தினசரி மலம் கழித்துவிடுகிறோம் (மலச்சிக்கல் உள்ளவர்களை தவிர) என்று நினைக்கிறோம். இதற்க்கு நான் சந்தித்த அனுபவத்தை பகிர்ந்துகொள்கிறேன்.

ஆடுதுறை இயற்கை உணவு பயிற்சி முகாமிற்கு எங்களுடன் ஒரு ஆசிரியர் பங்கேற்பாளராக வந்திருந்தார். அவர் அடுப்பில்லா சமையல் இயற்கை உணவும் எடுத்து கொள்ளாமல் 6 நாட்கள் தண்ணீர் மட்டுமே குடித்து உண்ணாநோன்பு எடுப்பதாக பதிவு செய்தார். 6 நாட்கள் முடித்து அனுபவ உரை வகுப்பு நடந்தது. 6 நாட்களும் மலம் கழித்ததாக அந்த ஆசிரியர் அனுபவ உரையில் பகிர்ந்து கொண்டார். அவர் அனுபவம் உண்மையா என்பதை 1 நாளோ 2 நாளோ உண்ணா நோன்பு இருந்து பாருங்களேன்.

‘‘குடல் சுத்தம் தாங்க உடல் சித்தம்‘‘

கழிவுகள் தேங்கி நோய்கிருமிகளை உண்டு பண்ணி உறுப்புகளை செயல்படாமல் செய்து பல நோய்களுக்கு ஆளாகாமல் இருக்க வேண்டுமென்றால் நாம் பேதி மருந்து எடுத்துகொள்ள வேண்டும்.

நாங்கள் சிலருக்கு பேதி மருந்து கொடுத்த அனுபவத்தை பகிர்ந்துகொள்கிறேன்.

- ஒருவருக்கு கருப்பு பிசின் போல கழிவு வந்தது
- வேறொருவருக்கு பச்சை கலர் ஜெல்லி போல் வந்தது.
- ஒரு 9 வயது குழந்தைக்கு பச்சை, சிகப்பு கலரில் திரிதிரியாய் வந்தது.
- வெள்ளை தோசை மாவு போல் வந்தது.
- கரும்பச்சை கலரில் ஆடுபுழுக்கை போல் வந்தது.

நீங்களும் பேதி எடுத்து எப்படி வருகிறது என்று உங்கள் ஆரோக்கியத்தை தெரிந்துகொள்ளுங்கள். சரியான பேதி மருந்தை தேடுங்கள் கிடைக்கும். இரசாயன குப்பைகளை வயிற்றில் இருந்து அகற்ற இரசாயன பேதி மருந்தையே பயன்படுத்தி விடாதீர்கள். நல்ல இயற்கையான சித்தர்கள், பாரம்பரிய வைத்தியர்கள் சொன்ன பேதி மருந்தை கண்டு பிடித்து கழிவை நீக்குங்கள்.

கழிவு தேக்கம் நோய்
கழிவு நீக்கம் சிகிச்சை

நோயும் ஒன்றே சிகிச்சையும் ஒன்றே!

**- ராணிச்சந்திரன்**



**மு. அன்புதங்கம்**
6 ஆம் வகுப்பு,
அரசு உயர்நிலை பள்ளி
துளசேந்திரபுரம்

# மீனவர்களுக்கான ஒடக்கு செயலி

தமிழக கடற்பகுதிகளான கன்னியாகுமரி, நாகர்கோயில் மற்றும் கேரள மீனவர்களுக்கு நன்கு தெரிந்த நிறுவனம் தான் இந்த ஒடக்கு. மீனவர்கள் கடலுக்கு செல்லும் பொழுது அவர்கள் எங்கு பயணிக்கிறார்கள், எங்கு மீன்கள் அதிகம் கிடைக்கும், தடை செய்யப்பட்ட பகுதி என்ன போன்ற தகவல்களை ஒரு செயலி வழி வழங்கும் நிறுவனம்.

சேவியர், சொந்த ஊர் வானியக்குடி, நாகர்கோயில் பக்கம், கன்னியாகுமரி மாவட்டம்.

தனது பள்ளிப்படிப்பை அரசுப்பள்ளியில் படித்துவிட்டு, முதுகலை படிப்பை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் (MCA) முடித்ததும். Verizon, Telcodia, Ness போன்ற தனியார் தகவல் தொழிற்நுட்ப நிறுவனங்களில் தமிழகம் மற்றும் அமெரிக்காவில் வேலை செய்தார்.

மூன்று ஆண்டுகள் கடக்கும் பொழுதே அவருக்கு அதில் இருந்து வேறொரு தொழில் செய்யலாம் என்ற எண்ணம் தொடங்கியது.

வேலையில் இருந்து விடைபெற்ற பின் தனியாக அமெரிக்க நிறுவனம் ஒன்றுடன் சிறிய நிறுவனத்தை சென்னையில் தனி ஆளாக துவங்கினார்.

இதை பெரிய நிறுவனமாக திறக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு உதித்துள்ளது.

2007ஆம் ஆண்டு தனது சகோதரர் மற்றும் பல தோழர்களுடன் (பங்குதாரர்களாக) இணைந்து மீன்பிடி தொழிலில் இறங்கினார். இவர்கள் அனைவரும் சேர்ந்து 3 படகுகளை சொந்தமாக கொண்டு தொழில் செய்து வருகிறார்கள்.

இதில் கிடைத்த அனுபவங்களை கொண்டு ஒடக்கு என்ற செயலியை உருவாக்கினார்.




சேவியர் தான் இந்த நிறுவனத்தை துவங்கியவர்.

2009ஆம் ஆண்டு நாகர்கோயில் பகுதியில் 5 பணியாளர்களை கொண்டு கைப்பேசி செயலிகள் உருவாக்கும் நிறுவனத்தை நிறுவினார்.

ஒன்றரை ஆண்டுகளுக்கு பின் தொடர முடியாமல் நிறுவனத்தை மூடிவிட்டு, மீண்டும் தனி ஆளாக அமெரிக்க நிறுவனம் ஒன்றிற்கு செயலிகளை செய்து தரும் பணியில் ஈடுபட்டார்.

அந்த நாட்களில் தொடர்ச்சியாக அமெரிக்கா செல்லும் வாய்ப்பு அவருக்கு கிடைத்தது.

அப்பொழுது உடன் வேலை செய்த அமெரிக்க சக ஊழியர், சிறந்த நிறுவனம் தொடங்க அனைவரும் அமெரிக்க சந்தையை மட்டுமே நம்பி உள்ளார்கள். ஆனால் என்னுடைய பார்வையில் உங்கள் உள்ளூர் சந்தையின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை கொடுத்தாலே சிறந்த நிறுவனமாக இடம் பெறலாம் என்ற ஒரு அறிவுரையை வழங்கினார் சேவியர் அவர்களுக்கு.

தகவல் தொழிற்நுட்ப பணிகளுக்கு இங்கு வருகிறீர்கள். ஏன் உங்கள் ஊர் சந்தையில் உள்ள பிரச்சனைகளை நோக்கி சிந்திக்க கூடாது? செயல்பட கூடாது? என்று வினவினார்.

இதற்கு முன் தொடங்கிய நிறுவனத்தை மூடினாலும் 2012ஆம் ஆண்டு மீண்டும் தன்னுடைய மீன்பிடி தொழிலை வலுப்படுத்தும் வகையில் ஒரு நிறுவனத்தை துவங்கினார்.

GPSCல் உள்ள பிரச்சனைகள், மீனவர்கள் தங்கள் தகவல்களை காகிதங்களில் சேமித்து வைக்கிறார்கள். ஆகையால் இதற்கு தீர்வை தரும் GPS அடிப்படையில் கைப்பேசி செயலி உருவாக்க திட்டமிட்டார் சேவியர்.

இதற்கு இடையில் மீண்டும் சிங்கப்பூர் வந்து ஒன்றரை ஆண்டுகள் வேலை செய்தார். சிங்கப்பூரில் உள்ளூர் தோழர் ஒருவருடன் தகவல் தொழிற்நுட்ப நிறுவனத்தை துவங்கினார். இந்த நிறுவனமும் தோல்வியை தழுவியது.



அமெரிக்க தோழர் கூறிய செய்தி மீண்டும் நினைவுக்கு வந்து சென்றது. இறுதியாக 2017ஆம் ஆண்டு GPS அடிப்படையில் செயலியை உருவாக்கும் பணியில் முழு மூச்சாக ஈடுபட்டார்.

இதுவரை reference, information, data போன்று 1300க்கும் மேற்பட்ட தரவிறக்கும் செய்துள்ளார்கள்.

இதில் 500க்கும் மேற்பட்டவர்கள் வாடிக்கையாளர்களாக மாறியுள்ளார்கள்.

தொடக்க நிலையில் உள்ள நிறுவனங்களுக்கான போட்டியில், 600க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்குபெற்ற நிலையில் 10வது இடம் பெற்றது ஓடக்கு நிறுவனம். இதை International Council of Agricultural Research அமைப்பு 2017ல் நடத்தியது.

எந்த மாதிரியான தீர்வுகளை வழங்குகிறீர்கள் சேவியர் என்றோம்...

ஓடக்கு செயலி இடங்களை கண்டறிவதற்கு மீனவர்களுக்கு நன்கு உதவும் பொருளாக உள்ளது. பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது, முடிந்தவரை ஆபத்து குறைக்கவும் இது உதவுகிறது.

மீனவர்களுக்கு தேவையான மொழியில் அவர்கள் பயன்படுத்தலாம். உதாரணத்திற்கு தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழிகள் தேவையென்றால் ஏற்படுத்தி தருகிறோம்.

எந்த பகுதியில் வலைகளை சரியான இடத்தில் விரித்து மீன் பிடிக்க இயலும் என்பதை தெளிவாக செயலி மூலம் தெரிவிக்கிறோம்.

மீன் வியாபாரிகளுக்காக உருவாக்கப்பட்டதால் ஆழ் கடல் மற்றும் கரையோர மீனவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளை எளிய முறையில் தெரிவிக்கிறோம்.

இது போன்ற பல பிரச்சனைகள் உள்ளது, அதை நம் செயலி மூலம் சரி செய்கிறோம்.

எப்படி இது போன்ற பிரச்சனைகளை கண்டறிந்தீர்கள் சேவியர்?

செயலி துவங்கும் முன்னரே மீன் பிடி தொழிலில் இருந்ததால் எங்களுக்கு எளிதாக இருந்தது.

இதற்கு முன் தொடங்கிய நிறுவனங்களை மூடிய பின்னும், எவ்வளவு முதலீட்டுடன் நீங்கள் ஒடக்கு நிறுவனத்தை துவங்கினீர்கள்?

தோல்விகள் வந்துகொண்டே இருக்கும், அதற்காக தொழில் தொடங்குவதை கைவிட கூடாது. 5 லட்சம் முதலீட்டுடன் துவங்கினேன் பிற பங்குதாரர்களின் உதவியுடன்.

கன்னியாகுமரி முதல் மங்களூர் வரை வாடிக்கையாளர்கள் உள்ளார்கள்.

நோக்கம்
United Nation Goal 14 (Life for fisheries / life below water)
மேற்சொன்ன தலைப்பின் அடிப்படையில் அடுத்தகட்ட வசதிகளை ஒடக்கு செயலியில் நிறுவும் முயற்சியில் உள்ளோம்.

மீன்பிடி தொழிலை இன்னும் சிறப்பாக கையாள, மற்றும் பாதுகாக்க தகவல் தொழிற்நுட்பம் அவசியம்.

இந்த செயலில் மேலும் என்னென்ன வசதிகள் உள்ளது?

மீனவர்கள் கடலில் உள்ள பொழுது தடைசெய்யப்பட்ட இடங்கள் மற்றும் சர்வதேச வழிகாட்டுதல் மற்றும் எல்லை விவரங்களை தெரிவிக்கிறோம்.

எங்களுடையப் பார்வையில் ...

தற்போது சந்தையில் உள்ள இது போன்ற செயலிகள் விலை அதிகமாக உள்ளது. நம்முடைய செயலியை மீனவர்கள் பயன்படுத்தும் பொழுது தகவல்களை செயலியிலேயே சேமிக்க முடியும். அவர்கள் எழுதி வைக்கும் காகிதங்களுக்கு இனி விடுமுறை. தகவல்கள் அனைத்தும் பாதுகாப்பாகவும் இருக்கும்.

மீனவர்கள் தாங்கள் பிடிக்கும் மீன், இறால், நண்டு என்று அனைத்தையும் இடைத்தரகர்கள் உதவி இல்லாமல் விற்க இயலும். இதனால் சந்தையில் மீன்களின் விலையை கட்டுப்படுத்த முடியும்.

இதனால் வாடிக்கையாளர்களும் பெரும் பயனடைவார்கள் இனி. மீன்களை எப்பொழுது பிடிக்கிறார்கள்? கடைக்கு என்று வந்தது? போன்ற அனைத்தையும்

வாடிக்கையாளர்கள் Odaku செயலியில் உள்ள QR Code மூலம் எளிதில் அறியலாம்.

மீன்கள் எப்பொழுது பிடிக்கப்பட்டது என்று அறியாமல், நல்ல மீன்கள் எதுவென்று தெரியாமல், பழைய மீன்களை இனி வாங்கி செல்லும் முறையை தவிர்க்கலாம்.

மீனவர்களின் லாபமும் அதிகரிக்கும். இடைத்தரகர்களை தவிர்ப்பதால்.

இது வரை மீனவர்களின் பிரச்சனைகளை உள்ளூர் தகவல் தொழிற்நுட்பங்கள் எந்த அளவு சரி செய்தது என்று தெரியவில்லை. இருந்தாலும் ஒடக்கு தவிர்க்க முடியாத செயலியாக இருக்கும் என்பதில் எந்த மாற்றமும் இல்லை என்று கூறி விடை பெற்றோம்.

தமிழக மீனவர் இந்த செயலியை பெற விரும்பினால் அடுத்ததாக கொடுத்துள்ள தகவல்களை பயன்படுத்தி கொள்ளுங்கள்.

Odaku Online Service Pvt Ltd

Google Playstore: Odaku
அல்லது
தரவிறக்கம் செய்ய: https://play.google.com/store/apps/details?id=com.odaku

நிறுவனத்தின் இணையம்: www.odaku.in
மின்னஞ்சல் முகவரி: info@odaku.in
கைப்பேசி இலக்கம்: +91 94432 16829

நன்றி.

**- மன்னை மதி**

# நம் வாழ்க்கை நம் கையில்

இது கவிதையல்ல
நாம் படித்து
ரசிப்பதற்கு
நம் வாழ்க்கை.

கத்தியும் கன்னிவெடிகளும்
நம்மை அழிக்குமெனில்
கார்பன்-டை-ஆக்ஸைடும் அழிக்கும்.

வாகனங்கள் வழிப்பயணத்தை குறைக்காது - ஆனால்
வாழ்க்கை பயணத்தை குறைக்கும்.

நெகிழி வாழ்விற்கு துணையல்ல
அழிவிற்கே துணை.

ஓசோன் ஓட்டை
உலகையே அழிக்கும் - இவையனைத்தும்
மறக்க முடியாத உண்மைகள்.

படைத்தவன் நினைத்தாலும்
தடுக்க முடியாத இவற்றை

நாம் நடும்
மரக்கன்றுகள் தடுக்கும்.

மரம் நடுவோம்
மனித குலம் வாழ
மரமெனும் உரம் இடுவோம்...

ஆளுக்கொரு மரம் வளர்த்தாலே
நம் சந்ததி வாழுமே...

மீண்டும் கூறுகிறேன் - இது
கவிதையல்ல படித்து ரசிப்பதற்கு.
நம் வாழ்க்கை.

இலக்கியா இளவரசன்

பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள்
பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal மன்னையின் மைந்தர்கள்